பதிவு அஞ்சல் மூலம்

நகர் ஊரமைப்பு துறை

அனுப்புநர்
திரு.[illegible],B.E.,M.Tech(IITD),AITP.,
இ[illegible] / உதவி இயக்குநர்(பொ),
[illegible]மைப்பு அலுவலகம்,
எண்.14/ஜி,முதல் மாடி, M.B.T ரோடு.,
நவல்பூர், ராணிப்பேட்டை – 632 402
மின்அஞ்சல்:dtcp.ranipettai@gmail.com
தொலைபேசி: 04172-290719

பெறுநர்
தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி
அலுவலர்(கி.ஊ),
மேலப்பழந்தை ஊராட்சி,
திமிரி ஊராட்சி ஒன்றியம்,
கலவை வட்டம்,
ராணிப்பேட்டை மாவட்டம்.

நாள்:17.06.2021

ந.க.எண்.306/2020/ராமா

அய்யா,

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ராணிப்பேட்டை மாவட்டம், கலவை வட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியம், மேலப்பழந்தை ஊராட்சி /கிராமம், சர்வே எண்கள்: 47/7A, 49, 50/1A, 2, 51A/3B, 53/1, 2 -ல் 4.81 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் அளித்தல் - குறித்து.

பார்வை:

01. மனுதாரர்கள் திரு.S.சுபாஷ், திருமதி.S.கலைவாணி அவர்களின் கடிதம் நாள்.09.09.2020.
02. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்: 28.12.2020 (ம) 09.03.2021 (சாலை (ம) பொது ஒதுக்கீடு ஒப்புதலளிக்கப்பட்டது)
03. மனுதாரர் கடிதம் நாள்:23.02.2021 (ம) 22.04.2021 (தானபத்திர அசல் ஆவணம் பெறப்பட்டது )
04. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020/போ நாள்:24.12.2020
05. அரசாணை எண்:138, வீட்டுவசதி மற்றும் நகர்புறவளர்ச்சித்துறை நாள்:04.06.2004.
06. அரசாணை எண்:79, வீட்டுவசதி மற்றும் நகர்புறவளர்ச்சித்துறை நாள்:04.05.2017.
07. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020.
08. அரசாணை எண்:141, வீட்டுவசதி மற்றும் நகர்புறவளர்ச்சித்துறை (UD4(3) நாள்:04.05.2017.
09. அரசாணை எண்:181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (UD4(1) நாள்:09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1 நாள்.08.09.2017.
12. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்:28.04.2021 (நன்னிலை வரி (ம) Display Board கட்டணம் கோரப்பட்டது).
13. மனுதாரர் கடிதம் நாள் 29.04.2021 (நன்னிலை வரி செலுத்தப்பட்டு கடிதம் பெறப்பட்டது)

*****

S.Sol...
S.Kalaivani

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்தில் ராணிப்பேட்டை மாவட்டம், கலவை வட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியம், மேலப்பழந்தை ஊராட்சி /கிராமம், சர்வே எணகள்: 47/7A, 49, 50/1A, 2, 51A/3B, 53/1, 2 -ல் 4.81 ஏக்கர் பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வவலக கடிதம் நாள்: 28.12.2020 மூலம் மனைப்பிரிவு சாலை (ம) பூங்கா அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 3-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண்.158/2021 நாள்:25.01.2021 (ம) தானப்பத்திர எண்.954/2021 நாள்:16.04.2021–ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/மா.ந.ஊ.உ.இ.(ராமா) எண்.45/2021** என எண்ணிடப்பட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9(ஆ)-ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மபந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக் கடிதம் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனை**

1. (a). பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன் படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் " Collection the necessary fees including the charges for providing amenities like roads, storms water drains and street lights form the applicant" After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b). மாநகராட்சி/நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads. Provide othher amenitites like storm water drains water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the strands specified by the Local Body"
2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு EWS மேலாகியும் மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

S. Kalaivani

4. " The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016) The Promoter has to advertise, market book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot apartment or building as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority –ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின்படி விதி எண்.3-ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-யையும் மற்றும் விதி எண்.9-ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**தலைப்புக்கணக்கு:**

0217 Urban Development - 60 Other Urban
Development Schemes - 800 Other Receipts - AS
Receipts Under Land use conversion charges-27
Non Taxation fees - 09 Collections.
DPC: 0217 60 800 AS 2790

**தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), மேலப்பழந்தை ஊராட்சி / கிராமம், திமிரி ஊராட்சி ஒன்றியம்** ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சான்று உடன் அனுப்பி வைக்குமாறு **தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), மேலப்பழந்தை ஊராட்சி / கிராமம், திமிரி ஊராட்சி ஒன்றியம்** கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும், மனுதாரர் மேற்கண்ட உத்தரவு பெற தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), மேலப்பழந்தை ஊராட்சி / கிராமம், திமிரி ஊராட்சி ஒன்றியம் அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(5 தொகுப்பு மற்றும் அசல் தான பத்திரம்)

இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ராணிப்பேட்டை மாவட்டம்.

**நகல்:**

1. மனுதாரர்
   திரு.S.சுபாஷ், திருமதி.S.கலைவாணி
   எண்.16, ரவிசங்கர் அவென்யூ,
   மடம் தெரு,காஞ்சிபுரம்-631 502.
2. இருப்பு கோப்பு (வரைபடம் -1 (ம) நிபந்தனைகள் படிவம் -1)
3. கோப்பு (வரைபடம் -1 (ம) நிபந்தனைகள் படிவம் -1)
4. Real Estate Regulatory Authority (RERA)
   No.1, Gandhi – Irvin Road,
   CMDA Building, Egmore, Chennai.

S. Subash
S. Kalaivani

திமிரி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)/ மேலப்பழந்தை ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் செயல்முறைகள் முன்னிலை: திருமதி.வீ.ஜெயஸ்ரீ,,, B.Com,

ந.க.ஆ3/1294/2021

நாள்: 13.09.2021.

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் - திமிரி ஊராட்சி ஒன்றியம் - மேலப்பழந்தை ஊராட்சியில் சர்வே எண்கள்:47/7A,49,50/1A, 2, 51A/3B, 531, 2-ல் 4.81ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்றுள்ள குடியிருப்பு மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்டது - மனைகளை வரன்முறைபடுத்த - மனைகளின் சந்தை மதிப்பில் 3% வரன்முறைபடுத்துதல் கட்டணமும் - வளர்ச்சி கட்டணம் மற்றும் கூராய்வு கட்டணம் ரு.1000 வசூலித்து உரிய தலைப்புகளில் செலுத்தபட்டது நிபந்தனைகளுக்குட்பட்டு மனைபிரிவு அனுமதி வழங்குதல் - சார்பு.

பார்வை: 1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொது) இராணிப்பேட்டை அவர்களின் கடிதம் ந.க.எண்:308/2020/ரா.மா நாள்: 17.06.2021

2.தான பத்திர ஆவண எண்:158/2021 நாள்:25.01.2021 மற்றும் 954/2021 நாள்:16.04.2021.

3.திமிரி வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), அவர்களின் கடிதம் ந.க.ஆ3/1294/2021, நாள்:25.08.2021

4.சம்மந்தப்பட்ட மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கடிதம் நாள்: .08.2021

5.அரசாணை எண்:21, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3)அ நாள்:05.02.2019

6.அரசாணை எண்:79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3)அ நாள்:04.05.2019.

7.நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 19799/2020/போ. நாள்:2412.2020.

8. அரசாணை எண்:138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:04.06.2004

9. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீ வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. 31.01.2020.

10.அரசாணை எண்:141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3) நாள்:04.05.2017.

11. அரசாணை எண்:181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(1) நாள்:09.02.2020.

12.அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:30.08.2017.

13.திமிரி வட்டார் வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), அவர்களின் கடிதம் ந.க.ஆ3/1294/2021, நாள்:08.09.2021

14.மேலப்பழந்தை ஊராட்சி மன்ற தீர்மான எண்:35 நாள்: 13.09.2021

15. மேலப்பழந்தை ஊராட்சி மன்ற பல்வகை ரசீது எண்:17 நாள்:09.09.2021

16.அரசு கணக்கில் செலுத்திய நாள்: 14.09.2021

************



S.Stalin
S.Kalaivani

இராணிப்பேட்டை மாவட்ட இணை இயக்குநர் / உதவி இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், அவர்களின் செயல்முறைகள் கடித உத்தரவின்படி, மேலப்புதுக்கை ஊராட்சியில் சர்வே எண்கள்:47/7A,49,50/1A, 2, 51A/3B, 531, 2-ல் 4.81ஏக்கர் பரப்பளவில் அமையப்பெற்றுள்ள மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்படுவதை தொடர்ந்து விற்கப்படாத மனைகளின் மொத்தப்பரப்பளவு 209523.60 சதுர அடியில் 87556 சதுர அடி அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், இராணிப்பேட்டை மண்டலம் அவர்களுக்கு தானமாக பார்வை 2-ன் படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள், மின்கம்பங்கள், ஆவணங்களின் உண்மைத்தன்மை , நீர்நிலைகள், இரயில் பாதை , சுடுகாடு, இடுகாடு மற்றும் பூங்காக்களை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க பார்வை 3-ல் காணும் கடிதவழி சம்மந்தப்பட்ட மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது.

பார்வை 4-ல் காணும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலரின் அறிக்கையில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள். மின்கம்பங்கள், ஆவணங்களின் உண்மைத்தன்மை , நீர்நிலைகள், இரயில் பாதை , சுடுகாடு, இடுகாடு மற்றும் பூங்காக்களை ஆய்வு செய்து அரசு விதிக்களுக்குட்பட்டுள்ளதாக அறிக்கை சமர்பித்துள்ளார். மேலும் பூங்கா 2ல் உள்ள மனை எண்கள் 6,7ல் மட்டும் குறைமின்னழுத்த கம்பிகள் செல்வதால் மேற்படி மனைகளை வரன்முறைபடுத்த ரு.20 க்கான ஒப்பந்த பத்திரத்தில் மனுதாரரிடம் உறுதிமொழி பெற்று மனைகளை வரன்முறைபடுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், குடியிருப்பு மனைப்பிரிவில் அமையபெற்றுள்ள மனைகளை வரன்முறைபடுத்த, மனைகளின் சந்தை மதிப்பில் 3% வரன்முறைபடுத்துதல் கட்டணமும், மனுதாரர் மேற்படி சர்வே எண்ணில் அமைந்த மனைப்பிரிவிற்கு தார் சாலைகள், கழிவு நீர் கால்வாய் மற்றும் மின் கம்பங்கள் போன்றவற்றினை தனது சொந்த செலவில் அமைத்து தரும் பட்சத்தில் ரு.282425/- (எழுத்தால் ருபாய் இரண்டு லட்சத்தி எண்பத்தி இரண்டாயிரத்து நானூற்றி இருபத்தி இந்து மட்டும்)-ம் அல்லது மேற்படி ஊராட்சி நிர்வாகமே மேற்படி பணிகளை செய்ய கோரினால் அதற்குண்டான தொகையினை இவ்வொன்றிய பொறியாளரை அணுகி மதீப்பீட்டிறிக்கையை பெற்று அதற்குண்டான தொகையினை ஊராட்சி கணக்கில் செலுத்துமாறு பார்வை 13ல் காணும் கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டதைபடுத்து மனுதாரர் கீழ்காணுமாறு கட்டணம் செலுத்தியுள்ளார்.

<u>செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:</u>

1) <u>வரன்முறைப்படுத்துதல் கட்டணம்:</u>
4.81 ஏக்கர் பரப்பில் பொது உபயோகம்போக மீதி பரப்பளவு 2.764 ஏக்கர் சந்தை மதிப்பில் 3% வரன்முறை கட்டணம் ரு.49690/-மற்றும் கூராய்வு கட்டணம் ரு.1000 சேர்த்து மொத்தம் ரு.50690/-மட்டும்.

0217 - Urban Development
60 - Other Urban Development Scheme
800 - Other Receipts
AT - Receipt Under Regularization Charges of Unapproved Layout & Plots – DTCP
27- Non Taxation Fees
30 - Regularisation
DP Code – 0217-60-800-AT2730)

மேற்படி அரசு கணக்கில் செலுத்தப்பட்டு உரிய இரசீதுகள் பெறப்பட்டுள்ளன.



S. Stalin
S. Kalaivani

2) வளர்ச்சி கட்டணம்

மனைகளுக்கான மொத்த பரப்பளவு 209523.60 சதுர அடி பூங்கா பொது பயன்பாட்டிற்கு தான செட்டில்மண்ட் போக மீதமுள்ள விற்பனை செய்யப்படாத பரப்பளவு 120572 சதுர அடி அல்லது 11297 சதுர மீட்டர் பரப்புக்கு மனுதாரர் மேற்படி சர்வே எண்ணில் அமைந்த மனைப்பிரிவிற்கு தார் சாலைகள், கழிவு நீர் கால்வாய் மற்றும் மின் கம்பங்கள் போன்றவற்றினை தனது சொந்த செலவில் அமைத்து தரும் பட்சத்தில் வளர்ச்சி கட்டணமாக ரூ.282425/- (எழுத்தால் ருபாய் இரண்டு லட்சத்தி எண்பத்தி இரண்டாயிரத்து நானூற்று இருபத்தி ஐந்து மட்டும்) செலுத்தப்படவேண்டும். மேற்படி பணிகளை ஊராட்சி நிர்வாகமே செய்ய கோரினால் அதற்குண்டான தொகையினை இவ்வொன்றிய பொறியாளரை அணுகி மதிப்பீட்டறிக்கையை பெற்று அதற்குண்டான தொகையினை ஊராட்சி கணக்கில் உரிய தலைப்புகளில் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டதில் சர்வே எண்ணில் அமைந்த மனைப்பிரிவிற்கு தார் சாலைகள், கழிவு நீர் கால்வாய் மற்றும் மின் கம்பங்கள் போன்றவற்றினை தனது சொந்த செலவில் அமைத்து தருவதாக ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதால், வளர்ச்சி கட்டணமாக ரூ.282425/-(எழுத்தால் ருபாய் இரண்டு லட்சத்தி எண்பத்தி இரண்டாயிரத்து நானூற்றி இருபத்தி ஐந்து மட்டும்) மேலப்பழந்தை ஊராட்சி நிதிகணக்கில் பல்வகை ரசீது எண்:17 நாள்:09.09.2021 மனுதாரர் செலுத்தியுள்ளார். மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்து ஊராட்சி மன்ற தீர்மான எண்:35 நாள்: 13.09.2021 -ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது

மேற்படி தொகை செலுத்தப்பட்ட விவரம் மற்றும் ஏற்கனவே பொதுநலன் உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பூங்காக்கள் பரப்பளவிற்கான இடம் மற்றும் மனைப்பிரிவிற்குட்பட்ட சாலைகள் உள்ளாட்சி அமைப்பிற்கு தானபத்திரம் எழுதி பத்திரப்பதிவு செய்யப்பட்டு அதற்கான அசல் ஆவணம் (158/2021 நாள்:25.01.2021) மற்றும் (954/2021 நாள்:16.04.2021) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், இராணிப்பேட்டை மண்டலம், அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பூங்கா 2ல் உள்ள 6, 7 மனைகளில் செல்லும் குறைமின்னழுத்த கம்பிகளை மனுதாரர் தமது சொந்த செலவில் மாற்றம் செய்து அமைத்து தருவதாக ஒப்பந்தம் செய்துள்ளதை தொடர்ந்து, 6,7 ஆகிய இரண்டு மனைகளை தவிர்த்து, பிறமனைகளை பார்வை (1)ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின், மனைப்பிரிவு வரைமுறைபடுத்துதல் எண்: 45/2021-என ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடம் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. மனைப்பிரிவு வரைபடத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சாலைகள், பொது உபயோக ஒதுக்கீடு பூங்கா ஆகியன கிராம ஊராட்சிக்கு உரிமையானதாகும். இதில் ஊராட்சியின் அனுமதியின்றி யாதொரு பணிகளை மேற்கொள்ளவும், தடைகளை ஏற்படுத்தவும் மனைப்பிரிவு உரிமையாளருக்கு எவ்வித உரிமையும் இல்லை.
2. மனைப்பிரிவில் தார் சாலைகள் , கழிவு நீர் கால்வாய் மற்றும் மின்கம்பங்கள் போன்றவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் அமைத்து தர வேண்டும்.
3. மனைப்பிரிவில் இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றம் செய்யக்கூடாது.
4. மனைப்பிரிவு அமைந்துள்ள இடத்தினை உட்பிரிவு செய்து ஊராட்சிக்கு சொந்தமான இடத்தினை ஊராட்சியின் பெயரில் மாற்றிய பிறகே விற்பனை செய்ய தொடங்க வேண்டும்.
5. மனுதாரர் அளித்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதியளிக்கப்படுகிறது.



S. Kalaivani

எதிர் வரும் காலத்தில் மேற்காணும் நிபந்தனைகளை மீறும் பட்சத்திலோ (அ) அரசு விதிக்கு புறம்பாக நடைபெறும் பட்சத்திலோ வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்து ஆணை பிறப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
திமிரி. 3/9/24

13/9/2024

பெறுநர்:
திரு. S.சுபாஷ்/ கலைவாணி,
எண்:16, ரவிஷங்கர் அவென்யு
மடம் தெரு,
காஞ்சிபுரம் - 631502.

நகல் பணிவு:
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், இராணிப்பேட்டை மண்டலம்,
2. உதவி இயக்குநர்(ஊராட்சிகள்),
இராணிப்பேட்டை.

நகல்:
ஊராட்சி செயலர், மேலப்பழந்தை ஊராட்சி.



S. Sekar S. Kalaivani